நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
A\L 91
பௌதிகம்
... - வெப்பவியல்
...கணேசன் B. Sc

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

... 04 ... 85 செவ்வாய் 01-05-1990 (சித்திரை 17) ஷவ்வால் (5

நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
O/L
Day Class 1990 DEC
ஆரம்பம்: 1 - 5 - 1990
காலை 8 ம. முதல் 1 ம. வரை

# ...ர்தலை நோக்கமாகக் கொண்டு
# ...மதுகட்சி உருவாக்கப்படவில்லை



## இதுவரை செயலற்றிருந்த அமைப்புக்கள் தொழிலாளர் உரிமைபற்றிப் பேசுகின்றன

**தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாது — அதற்காக எமது மக்கள் நடாத்திய போராட்டத்தில் இதுவரை கலந்துகொள்ளாது — செயலற்றிருந்த அமைப்புககள் எமது மக்களின், தொழிலாளர்களின உரிமைகள் பற்றி இன்று பேச அரம்பித்திருக்கின்றார்கள். இவர்கள் சந்தர்ப்பவாதிகள் மட்டுமலல — எமது மக்களின் — தொழிலாளர்களின் — அவர்களுடைய போராட்டத்தின் எதிரிகளும் ஆவா. இவர்களை மககள் இனங்கண்டுகொள்ள வேணடும்.**

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு.கோ.மகேந்திரராஜா 'மே தினம்' தொடர்பாக தமிழீழ மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

எமது புரட்சிகர விடுதலை இயக்கத்தின் அரசியற் பிரிவு இன்று ஓர்மக்கள் அமைப்பை, தொழிலாளர் அமைப்பைக் கட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பரந்துபட்ட மக்களை

→ 8 ஆம் பக்கம் பார்க்க

### கல்லுவைக்குர் தொழிலாளர் கூட்டம்

எதிர்வரும் நான்காம் திகதி மாலை நான்கு மணிக்குயாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் செயலகத்தில்

→ 8 ஆம் பககம் பார்க்க

### பருத்தித்துறையில் நினைவஞ்சலிக் கூட்டம்

இந்திய இராணுவக் கலவரங்களின் போது உயிர் நீத்த போராளிகளான பருத்தித்துறைப் பொறுப்பாளர் மேஜர் மொறிஸ், ரம்போ, சிறி ஆகிய மூவரின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறையில் இடம் பெறவுள்ளது. (39)

### ...ர் ஜனநாயக முன்னணியின் மேதினப் பிரகடனம்

## ...ழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு ...சமைப்பு உருவாக்க வேண்டும்

...கைத் தீவில் நெருக்...வித்து சமாதானத்தை ...நாடு சென்று கொண் ... இத்தருணத்தில் ...கை ஜனாதிபதியின் புதிய அணுகு முறையால் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்று தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இனப்பிரச்சினையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும். அதே சமயம் தமிழ் பேசும்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

### பாதுகாப்புத் தருவோம் ஆனால் தாக்கமாட்டோம்

புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதால் தமது தொகுதிகளுக்கு போக முடியாது உள்ளது எனவும் தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறும் அவசர கால நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. ஜனாப் ஹிஸ்புல்லா பொலிசாரைக் கேட்டுக் கொண்டதற்கு பாதுகாப்புத் தரலாம் ஆனால் இடையில் ஏதாவது ஏற்பட்டால் நாங்கள் திருப்பித் தாக்க மாட்டோம் எனப் பொலிசா தெரிவித்துள்ளனர்.

## ...றுவர்களைவேலைக்கு எடுப்பதை தடுக்கச் சட்ட நடவடிக்கை

...றுவர் சிறுமியரை வீட்டுப் ...ணியாளர்களாக அமர்த்...ம் சட்ட விரோதச் செயல் ...ன்று நாட்டில் அதிகரித்து ...ருவதால் இச். சிறுவர் சிறுமியரை வேலைக்கு அமர்த்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவிருகின்றது.

பன்னிரண்டு வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர் சிறுமியர் வீட்டுப் பணியாளர்களாக மட்டுமன்றி வேறெந்த வேலைகளுக்கும் அமர்த்தப்பட முடியாது எனவும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழில்முயற்சி நிவாரணம் 300 லட்சம ரூபா யாழ் வந்தது

தொழில் முயற்சிக்கான4000 ரூபா கொடுப்பனவுக்காக 300 லட்சம்ரூபா யாழ் செயலகத்திற்கு வந்தடைந்துள்ளது.

விரைவில் இந்த நிவாரணத்திற்கு தெரிவுசெய்யப்பட்டோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (03)

## கோட்டாஞ்சேனை ஏஜென்ஸியில் தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

...ற்று கொழும்பு கொட்...சேனைப் பகுதியில் ... பிரயாண முகவர் ...யத்தில் தமிழ் இளை... ஒருவர் சுட்டுக்கொல்...டார்.

பிரயாண முகவர் நிலையத்தில் பெருமளவு மக்கள் தமது பிரயாண டிக்கெற்றுக்களைப் பெறுவதற்காக நின்று கொண்டிருந்த போதே இச் சூட்டுச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இனந்தெரியாத சிலர் பிரயாண முகவர் நிலையத்தினுள் திடீரெனப் புகுந்து அங்கிருந்தபிரஸ்தாபஇளைஞரைச் சுட்டுக் கொன்று விட்டு தப்பிச் சென்றுவிட்டார் சுட்டுக்கொல்லப்பட்டவர் பகீரதன் என அழைக்கப்படுபவர் என தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தினால் அங்கிருந்தவர்கள் அச்சத்தினால் தமது கடவுச்சீட்டுகள் பிரயாணசீட்டுகள்என்பவற்றைப் போட்டுவிட்டு தப்பிஓடிவிட்டதாகத் தெரியவருகிறது.

### யாழ் கொழும்பு பஸ் சேவை

கொழும்புக்கான பஸ் சேவையை வட பிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் ஆரம்பித்துள்ளது.

காலைச்சேவையில் காரைநகர் டிப்போவும் இரவுச் சேவையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை டிப்போவு சேவையாற்றவுள்ளன.

இதற்கான ஆசனப்பதிவுக ஏற்கப்படுமென யாழ் ப... நிலைய அதிகாரிகள் தெரிவி...தனர்.

### முரசோலி அனுசரணையுடன் 115 மைல் சைககிள் ஓட்டபோட்டி

(வவுனியா)

...வுனியா புதுக்குளம் சித்தி...யகர் விளையாட்டுக் கழ...ன் பன்னிரண்டாவது ...டு நிறைவை முன்னிட்டு முரசொலி அனுசரணையுடன் 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றுநடைபெறவுள்ளது.

→ 8 ஆம் பக்கம் பார்க்க

### 150 இல. தமிழர் இதுவரைகை...

கடந்தவாரம்சூளைமேட்டுப் பகுதியில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தை தமிழகப் பொலி... சோதனையிட்டு பல ஆ...

... 8 ஆம் பக்கம் ப...

## அரச, தனியார் ஊழியர்களுக்கு சம்பள உயர்...

சகல, அரச தனியார் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுகள் இவ்வாண்டு வழங்கப்படவுள்ளன. இந்தச் சம்பள உயர்வுகள் அதிகரிப்புக் குறித்து ஜனாதிபதி இன்று நடைபெறும் மேதினக் கூட்டத்தில் அறிவிப்பார் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். கஷ்டப்பிரதேச ஊழியர் ஊக்குவிப்பு, அரச ஊழியருக்கு குறைந்த வட்டியில் வீடமைப்புக் ஆகிய திட்டங்களும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1990.06.01 ஆம் தேதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

* 1. கல்வியியல்சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 உதவி விரிவுரையாளர்.
2. கிறிஸ்தவ நாகரீகத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம்11 உதவி விரிவுரையாளர்.
3. அரபுமொழி இஸ்லாமிய நாகரிகத்தில் சிரேட்ட விரிவுரை வுரையாளர்தரம் 11/ வுரையாளர்.
4. வணிகம்/வியாபார நிருவாகத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரி உதவி விரிவுரையாளர்.
5. சமஸ்கிருதத்தில் சிரேட்ட விரிவுரையாளர்தரம்11/உதவி விரிவுரையாளர்.
6. நுண்கலையில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர்.
7, கர்நாடகவாய்ப்பாட்டில் போதனாசிரியர் தரம் 111,

* பதவி(1):- வணிகத்தில் அடிப் படைப்பட்டத்தையும் கல்வியியல்பட்டப்பின் டிப்ளோமாவையும் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

சிரேட்ட விரிவுரையாளர் தரம்1 ;
9600/- 8×250 - 11600/-ரூபா (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம்11:
8000 - 5 × 250 - 9250/-ரூபா (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்:
3900/-ரூபா மாதமொன்றுக்குஓராண்டுக்கு(நிலையானது)

போதனாசிரியர் தரம்11 :
3000-6×80-3480/-ரூபா (மாதமொன்றுக்கு)

மேற்குறித்தபதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் இதர விபரங்களும் இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23×10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியனவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள்மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத்தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர், ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: நுண்கலையில் சிரேட்ட விரிவுரையாளர் தரம்11/உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 . 04 . 27.

05009

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



என்றும் வாடாத அன்பு மலர்

### செல்வன் தணிகாசலம் ஜெகேசன்

[லெப்டினட் ரம்போ]

தாயின் மடியில் 03 - 06 - 1969
தாயக மண்ணில் 01 - 05 - 1989

ஜெயா

எமது செல்வமே நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் எமக்கு இது ஒரு கனவுதான் உனது செல்லப் பேச்சும் சிரிப்பும். அம்மா என்ற அன்புக் குரலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நிலையாகி விட்டது. உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
அன்புக்குரியவர்கள்

70050

## யாழ். மன்னார் கடுகதி பஸ் சேவை

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தினமும் பிற்பகல் 4 மணிக்கு விசேட கடுகதி பஸ் சேவை நடத்த வேண்டுமென, மன்னாரில் கடமையாற்றும் யாழ். அரச ஊழியர்கள் கருத்துத்தெரிவிக்கின்றார்கள்,

பல ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வித பஸ் சேவை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இப் பஸ் சேவை நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அது கைகூடவில்லை எனவே மீண்டும் ஆரம்பிக்கும்படி அரச ஊழியர்களும், வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிளிநொச்சியில் மத்தியஸ்தர்களாக நல்வர் தெரிவு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் உதைப் பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவு அண்மையில் நடை பெற்றது இதில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நால்வர் மத்தியஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். எம் இன்ப நாதன் சே புவனேந்திரராசா, என் கணேஸ்வர நாதன், ரீ கணேசலிங்கம் ஆகியோர் கிளிநொச்சியில் தெரிவானோரா...ர். (35

## கிறிஸ்தவ மாநாட்டுக்கு யாழ் இளைஞரும் பயணம்

பண்டாரவளை புனித தோமையர் கல்லூரியில் ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இலங்கை திருச்சபை வாலிபர் சங்கத்தின்வருடாந்த மகாநாட்டில் நல்லூர் கொக்குவில், உரும்பிராய் திருச்சபைகளைச்சேர்ந்த இருபது வாலிபர்கள் கலந்துகொள்ள அங்கு பயணமனார்கள்.

நல்லூர் பரியாக் கோபுர ஆலய சேகரச்குரு அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடியார் இவ் வாலிபர்களுக்கு பொறுப்பாளராக இவர்களுடன் பண்டாரவளைக்குச் சென்றுள்ளார். சுமார் ஐந்துவருடங்களுக்குப்பின்னர் இந்தவாலிபர் மகாநாட்டில் கலந்துகொள்ள வட பகுதிவாலிபர்கள் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றைக் குத்தகைக்குப்பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல்வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தில் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுர மீற்றர்களுக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்..
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிடவசதி, பூந்தோட்ட இடவசதி என்பனவற்றை உடையனவாய் இருத்தல்வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின் போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல்வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்தவேண்டிய குத்தகைப்பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990.05.25ஆம் திகதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் ''வீட்டைக் குத்தகைக்கு விடல்'' என எழுதப்படல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை,
30.04.1990.

05008

## 1-வது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் கு. ஜெராட்

காரைநகர் பொன்னம்பலம் வீதியில் வசிக்கும் செல்வன் கு. ஜெராட், இன்று தனது 1-வது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார், இவரை அப்பா (தாய்வான்), அம்மா, அப்பம்மா, பெரியப்பா அம்மார், சித்தப்பாமார், குடும்பத்தினர், தாத்தா, அம்மம்மாமார், பெரியமாமா (இத்தாலி), சின்னமாமா சித்தி, ஆச்சி அனைவரும் இறையருள் பெற்றுச் சீரும் சிறப்புடன் இனிதே வாழ வர்ழ்த்துகின்றனர்.

05005

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 01- 05- 1990

## நல்வாக்கு

தொழிலாளர்கள் முழு உரிமை களையும் அனு பவிக்காதவரை எந்த ஒரு நாடும் முழுச் சுதந்திரம் பெற்றதாக் கூறிக்கொள்ள முடியாது.

நேரு

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## உலக தொழிலாளர் தினம்

1886 மே முதலாம் திகதி சிக்காக்கோ நகரில் 8 மணி நேரவேலை உரிமை கோரி தொழிலாளர் போராடி வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தினர்.

இன்று உலகத் தொழிலாளர்கள் தமது தொழிளாளர் தினமாக அதே மே தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

கொழும்பில் மே தினம் வழமை போல் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

வழக்கம் போல் இம்முறையும் தென்னிந்தியத்திரைப்படக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

மே தினமென்றால் ஊர்வலம், கூட்டம், கோஷம், இசைநிகழ்ச்சி, 2 ரூபா ரிக்கற்றில் திரைப்படம் என்பனவே தொழிலாளர்களுக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

இந்த நிலையில்தான் தொழிற்சங்கங்கள் தொழிலாளரை வைத்துள்ளன.

மே தினத்தில் மட்டும் தொழிலாளர்களின் பரிதாப நிலைகுறித்து அறிக்கைகள் விடுவதுடன் சங்கங்களின் கடமை முடிந்து விடுகிறது.

வடக்கு-கிழக்கிலும் தொழிற்சங்கங்களின் மே தினவிழாக்கள் நடைபெறுகின்றன.

இம்முறை யாழ். மாவட்டத்தில் சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளின்கீழ் ஒரே மே தினக் கூட்டமாகவும், ஊர்வலமாகவும் செயற்படுகின்றன.

தொழிலாளர்கள் சங்கத்தில் ஒன்றிணைவதும், சங்கங்கள் மே தினத்தில் ஒன்றிணைவதும் மிகவும் பாராட்டுதலுக்குரிய விடயம்.

இதேசமயம் வடக்கு கிழக்கு தொழிலாளர்களே மலையகத் தொழிலாளர்களுக்கு அடுத்ததாக இலங்கையில் ஒடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்தகால வன்செயல்களால் சிவில்நிர்வாகம் சீரழிந்திருந்ததைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை நசுக்கி வந்துள்ளது.

யாழ்.நகரவர்த்தக நிலையங்களில் கடமை புரியும் பல ஊழியர்களுக்கு சேமலாபநிதி, லீவு போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

பல ஊழியர்களுக்கு பலவருடங்களாக எந்த ஒரு பதிவுமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வருடக்கணக்காக நிரந்தரமாக்கப்படாது நாள் சம்பளத்திற்கு வேலை செய்யும் ஊழியரே அதிகம்.

வடக்கு கிழக்கிலுள்ள பெண் ஊழியரின் நிலை இதைவிட பரிதாபகரமானது.

இன்று இலங்கை அரசிற்கு வருடாந்தம் 600 கோடி ரூபா வருமானத்தை அள்ளித்தரும் மலையக மக்களின் நிலையே எல்லாவற்றையும்விட மிகவும் பரிதாபகரமானது.

இலங்கையில் அதி உயரத்தில் அவர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்க்கைத்தரம் என்னமோ அடிமட்டத்திலேயே உள்ளது.

தமது இரத்தத்தை தேநீராகத்தரும் இவர்களின் நிலைஉயர இவர்களின் தொழிற்சங்கங்கள் முழுமனதுடன் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

உலகநாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளை முன்னின்று வழிநடத்தியவை தொழிற் சங்கங்களே.

வடக்கு கிழக்கில் நடைபெறும் போராட்டத்தில் இவர்களின் பங்களிப்பு ஏனோ குறைந்தே காணப்படுகிறது.

வடக்கு கிழக்கிற்கு என்றொரு தேசியக் கொடி தேசியகீதம் கிடைத்தால் மட்டும் போதாது.

வடக்கு கிழக்கிலுள்ள தொழிலாளரின் உரிமைகள், அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைத்தாலே உண்மையான இறைமை கிடைத்ததாக நாம் பெருமைப்படலாம்.

# தொழிற் சங்கங்களும்

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்ற கோஷத்தின் அடிப்படையில் மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக வரலாற்றிலே சுதந்திரப் போராட்டங்களில், பல உயிர்த்தியாகங்களைச்செய்து முன்னெடுத்துச் சென்ற, தொழிலாளர்வர்க்கத்தினரை நாம் போற்றி மதிக்கும் நன்னாள் இது. சுதந்திரப் போராட்ட அலைகள் ஓய்ந்து விட்டாலும்கூட தொழிலாளர்கள் போராட்டங்கள் ஓய்ந்து போவதில்லை. நாட்டில் நிலவும் வறுமை, பட்டினி, அறியாமை, கல்வி, பாரபட்சம், தொழில் வாய்ப்பின்மை போன்ற சமூக நீதிகட்காக தொடர்ந்தும் தொழிலாளர்கள் குரல் ஒலிக்க வேண்டும்.

எந்தப் பொருளாதார அமைப்பிலும் தொழிற் சங்கங்களின் பங்கு மிக முக்கியமானதாகும், ஒரு நாட்டின் அபிவ்ருத்திக்கு முதுகெலும்பாக இருப்பவை அந்நாட்டின் தொழிலகங்களும் தொழில்களும் என்பது கண்கூடு.

இத்தொழில்களும், தொழிலகங்களும் மேம்படுவதற்கு வேண்டிய செல்வங்களுள் தொழிலாளர் செல்வத்தை ஒன்று சேர்த்து கட்டமைப்பாக இயங்கும் தொழிற்சங்கங்கள் நாட்டிலே முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் எமது நாட்டின் பொருளாதார அமைப்பில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், சமூக முன்னேற்றத்திற்கும், தொழிலுறவுகளை ஏற்படுத்துவதற்கும் தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றுவது இன்றியமையாததாகும்.

தொழில் கொள்வோர் தொழிலாளரை மனிதாபிமானமற்ற முறையில் உற்பத்திப் பண்டமாகக் கணித்து நடத்திவந்த வரலாறு இன்று மாற்றம் அடைந்து விட்டது. ஆயினும் இவற்றின் எச்சசொச்சங்களை தொழிற் சங்கங்கள் பலவீனமடைந்துள்ள நாடுகளின், பிரதேசங்களில் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் தொழிற்சங்க வளர்ச்சியை நோக்கும்போது இருகால கட்டங்கள் தெரிவாகின்றன. 1935ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலம், தன்னியல்பான சங்கங்கள் இயங்கிய காலம். 1935ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரைஉள்ள காலப்பகுதி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் இயங்கிவரும் காலமாகும்-

இலங்கையில் தேயிலை, கோப்பிச் செய்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்கம் உருவாவதற்கு வழி செய்தது. ஆனால் அக்காலத்தில் தொழிலாளர் சுரண்டலுக்கும், மற்றும் குறைபாடுகளுக்கும் மத்தியில் தொழில் கொள்வோரின்அடிமைகளாகத் தாபன ரீதியில் ஒன்றுபடாத நிலையில் இருந்தனர்.

1893ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அச்சுத் தொழிலாளர்சங்கத்தினைத்தொடர்ந்து பல தொழிற்சங்கங்கள் ஏற்பட்டன. 1935ஆம் ஆண்டு தொழிற்சங்க வரலாற்றில் ஓர் மைல் கல்லாகும். இவ்வாண்டிலேயே தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை ஒன்றிணையச் செய்வதற்கான தொழிசங்க 14-ம் இலக்க தொழிற்சங்க உத்தரவுச் சட்டம் அமுலுக்கு வந்தது.

ஏழுபேர் சேர்ந்து தொழிற் சங்கம் அமைப்பதற்கும், சங்கத்தைப் பதிவு செய்வதற்கும் இச்சட்டம் வழி வகுத்ததுடன் தொழிற்சங்கங்களுக்கு சட்டபூர்வமான அந்தஸ்தினையும் கொடுத்தது.

இதைத் தொடர்ந்து சங்கங்கள் சட்டரீதியாக இயங்கவும், வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளிலே ஈடுபடவும் முடிந்தது 1943 ஆம்ஆண்டிலே குறைந்தபட்ச ஊதியம், வேலைநிபந்தனைகள்போன்ற விடயங்களை ஏற்படுத்துவதற்கும் சம்பளச் சபைகளை அமைப்பதற்கும் வேண்டிய அதிகாரம் தொழிலமைச்சருக்கு வழங்கப்பட்டது.மேலும் வர்த்தகத் துறை, கடைகாரியாலயங்களிலும் ஹோட்டல்களிலும் தொழில்புரிவோரின் வேலை நிபந்தனைகளை உள்ளடக்கிய கடை காரியாலயக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1971 ஆம் ஆண்டில் தனியார் துறையில் உள்ள தொழிலாளர்கள் ஒழுங்கு முறை நடவடிக்கை தவிர்ந்த வேறு எந்த ஒரு காரணத்தைக் காட்டியும் வேலை நீக்கம்செய்வதைத்தடைசெய்வதற்காகத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தல் தொடர்பான 45 ஆம் இலக்கச் சட்டம் அமுலுக்கு வந்தது.

ஆகவே அரசியல் தலைவர்களின் பின்னணி பலம் வாய்ந்த தொழிலாளர் வர்க்கத்தினைக் கட்டியெழுப்பும் உன்னதப்பலத்தினை மையமாகக் கொண்டமைதல் இன்றியமையாததாகும்.

# தொழிலாளர் கல்வியும்

தொழிலாளர்கள் தகுதிக்கேற்ற வேதனம்,சிறந்தசேவை நிபந்தனைகள், தொழிற் பாதுகாப்பு, கடமைக்கான சூழ்நிலைகள், ஓய்வு நேர வசதிகள், விடுமுறைகள், ஓய்வுகால நிதி, பெண்கள் நலச் சட்டங்கள், தொழிலாளர் கல்வி, வீடமைப்புத் திட்டம், நஷ்டஈடு போன்ற விடயங்களில் அதிகக் கவனம் செலுத்தப்படுதல் அவசியம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்வேண்டும். உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவதற்கு நாட்டில், அமைதியான சூழ்நிலைகள் நல்ல தொழில் உறவு முறைகள் இன்றியமையாதவை, எழும் பிரச்சனைகளைச் சுமுகமாகப் பேச்சுவார்த்தைகளாற் தீர்த்து வைக்கும் நோக்கம் தொழிற் சங்கங்களில்வளர்ச்சியடைய வேண்டும்.

தொழிற் சங்கங்கள் தொழிலாளர் நலன் கருதும் பாணியில் மாத்திரம் அமையாது, சமூக முன்னேற்றத்திற்கும், நாட்டின் அமைதி, போன்றவற்றைப் பேணிக்காப்பதற்கும், பாரபட்சங்களை தட்டிக் கேட்பதற்கும் ஏற்ற வகையில் அமைய வேண்டும்.

தொழிற்சங்க வளர்ச்சியில் தமது குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலையில் நம் நாட்டுத் தொழிலாளர்கள் இன்றும் கட்டி எழுப்பப்படாமை முக்கிய ஓர் பலவீனமாகும். மொழி ரீதியாகவும், இனரீதியாகவும் எமது பிரதேசத் தொழிலாளர்கள் பல்வகை இன்னல்களுக்கு ஆளாகி தம் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதற்கு தொழிலாளர்கள் ஒன்று படுதல் அவசியம்.

ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் தொழிலாளர்கள் ஒன்றிணைக்கப்படுவதன் மூலமே சுதந்திரமான போராட்ட உரிமைகளை இலகுவாக வென்றெடுக்க முடியும்.

சிறுவர் பராமரிப்புச் சட்டங்கள் அமுலில் இருக்கின்றன. எத்தனை கடைகளில், சேவைத்தலங்களில், வீடுகளில் சிறு பிள்ளைகள், குறிப்பாக 16 வயதிற்குட்பட்டோர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொழிற் சங்கங்கள் ஏன் இவற்றை கேட்கக் கூடாது.

இன்று தொழிற்சங்கங்கள் ஆட்சியில் மாறுதல் ஏற்படும் போதுஒரு அரசியற்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத்தினை விட்டு விட்டு மற்றுமொரு அரசியற் கட்சியைச் சார்ந்த சங்கத்தினை தொழிலாளர் நாடுகின்றனர். இதனால் தொழிற்சங்க வளர்ச்சிக்கு இன்றியமையாத நிரந்தரத்தன்மை மெலிவுறுகின்றது.

ஒழுங்குபடுத்தப்படாத கிராமியத்துறைத் தொழிலாளிகள், பெண்கள், விவசாயிகள் ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

தொழிலாளர் கல்வி மூலம் தேசிய ஒருமைப்பாடு, உற்பத்தித்திறன் போன்றவற்றின் முக்கியத்துவத்தினை தொழிலாளர்கட்கு இலகுவாக உணர்த்த முடியும். இதன் மூலம் தொழிலாளர்கள் முகாமையில் பங்கு கொண்டு சுமுகமான தொழில் உறவினை நிலைநாட்ட முடியும்.

தொழிலாளர் கல்வியில் ஏற்படும் அபிவிருத்தி எமது பெறுமானங்கள், சமூக கலாசார விழுமியங்களில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், தொழில் நுட்பத்துறைகளில் ஏற்படும் விரிசலை தொழிலாளர்கட்கு ஏற்ற முறையும் கற்றுக் கொடுப்பதற்கும் வசதியாக அமையும்.

உற்பத்தியின் மிக முக்கிய அம்சமாகத் தொழிலாளர் அமைவதனால் தொழிற் கல்வி, தொழில் அபிவிருத்தியுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக கணிக்கப்படுகின்றது. இன்று

—7ஆம் பக்கம் பார்க்க

சரோஜா சிவச்சந்திரன்

## மே தினம்...

இன்று-
புரட்சிப் பூக்களை நினைவுகூரும்
பூகம்ப நாள்.
அன்று–
ஆதிக்கத் தேர்கள்
அசையாது நின்றன......
அழிக்கச் சென்றன
மனிதக் குஞ்சுகள்......
அக்குவேறு ஆணிவேறாக
ஆட்டங்கண்டன ஆதிக்க ரதங்கள்!
உழைக்கும் வர்க்கத்தை
ஊறுபடுத்திய ஊதாரிகளை-
முறுக்கேறிக் கிடந்த
முரட்டு நரம்புகள்
முட்டி மோதின......!!
இரத்தம் கொட்ட ஓடினகால்கள்......?!
இந்த இரத்தமே
இன்றைய மே நாள்
இன்றும் -
ஏற்றுக்கொள்ளப்படாத நியதிகள்
ஏற்றமிறக்கம் நோக்கி
ஏசப்படும் நெஞ்சங்கள்......
ஏதேதோ பிறழ்ந்த நினைவுகள்.....
இதயம் கனக்கிறது . .
இதோ, ஆராதனை மலர்கள்-
இன்றே ஆழமான மனத்துடன்
இயற்ற வேண்டியதைப் பாருங்கள்

-சத்தியன்

# செய்தி மஞ்சரி

## களஞ்சியங்களில் கைவரிசை

அஞ்சல் தொலைத் தொடர்புகள் அமைச்சின் கீழ் உள்ள எல்லாக் களஞ்சிய சாலைகளிலும், அதன் சகல பிரிவுகளிலும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அமைச்சினால் அமைக்கப்பட்ட குழுவொன்றினால் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது களஞ்சிய சாலைகளில் உள்ள பெருந்தொகையான பொருட்கள் இல்லாதிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் விபர அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன.

## ஒரிஸாவில் தப்பியோர் கைது

ஒரிஸா அகதி முகாமிலிருந்து தப்பி வந்ததாகக் கூறப்படும் ஐந்து தமிழ் இளைஞர்கள் இராமேஸ்வரம் புகையிரத நிலையத்தில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

எவ்வித பிரயாண ஆவணங்களும் இல்லாத நிலையில் கைது செய்யப்பட்ட இவர்கள் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிளாஸ்ரிக் படகொன்றில் தங்கக் கட்டிகளைக் கடத்திச் சென்ற இரு தமிழ் இளைஞர்கள் சுங்க அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன் தங்கக் கட்டிகளும் கைப்பற்றப்பட்டன. இச் சம்பவம் தஞ்சாவூர் அருகே இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பீடி இலை இல்லை உற்பத்தி பாதிப்பு

போதியளவு பீடி இலை இறக்குமதி செய்யப்படாத காரணத்தினால் பீடி தயாரிப்பினைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் தொழிலாளர்கள் பெருமளவு பாதிக்கப் பட்டுள்ளனர்.

முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அளவிலிருந்து 75 சத வீதமே தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பீடி இலையின் விலை தற்போது அதிகரிக்கப் பட்டிருப்பதோடு அதற்கான சுங்கத் தீர்வையும் அதிகரிக்கப் பட்டதனாலேயே பீடி இலை தற்போது பெருமளவில் இறக்குமதி செய்யப்படுவதில்லை என தெரியவந்துள்ளது.

## கோழிக்குஞ்சு விநியோகம்

நீண்டகால இடைவெளிக்குப் பின் குண்டசாலை விவசாய திணைக்கள கோழிப் பண்ணையிலிருந்து நல்ல இன ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் யாழ் மாவட்டத்திலுள்ள கால் நடை வைத்தியஅதிகாரி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குப் பெறப்பட்ட 750 குஞ்சுகளும் பெயர் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதே போன்று யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் இக் கோழிக் குஞ்குகள் கிடைத்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் சேவல் இனக் கோழிக் குஞ்சுகளும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

## அறிவிப்பு அமுலாகவில்லை

மார்ச் முதல் பாலின் கொள்வனவு விலை 50 சத வீதமாக அதிகரிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்த பின்னரும் இதுவரை விலை அதிகரிக்கப்பட வில்லை என பால் உற்பத்தியாளர்கள். கவலை தெரிவித்துள்ளனர்.

கால் நடைகளின் தீனி விலை அதிகரிப்பு, பால் விநியோகச் செலவு அதிகரிப்பு போன்றவற்றினால் பாலுக்குத் தற்போது வழங்கும் பணம் போதாது என பால் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஹேமா பணிப்பு

ஏழைத் தாய்மார்களின் செலவைக் குறைக்கும் முகமாக குறைந்த விலையில் தயாரிக்கப்பட்ட 'விற்ராஸ் பிறே' என்ற குழந்தைகளுக்கான பால்மா தமக்குக் கிடைக்கவில்லை என கூட்டுறவுச் சங்கங்கள் செய்த புகார் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருமதி. பிரேமதாஸ மில்க் பூட்ஸ் லிமிட்டெட்டுக்கு பணித்துள்ளார்.

## மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தொலைக் கல்விப் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குக் கடிதம் கிடைக்காதவர்களுக்கும் தாமதமாகக் கடிதம் கிடைக்கப் பெற்றவர்களுக்கும் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும் என யாழ் மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் எவராவது இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள யாழ் மாவட்டத் தொலைக் கல்விப் பிரிவின் மத்திய நிலையத்தில் வெள்ளிக்கிழமைகளிற் படிவங்களைப் பெற்று நேரில் தமது விண்ணப்பங்களைக் கொடுக்கலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஐ.தே.க.செயற்குழு கூட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்குழுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் 4 ஆம்திகதி நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கென அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதோடு அன்றைய தினத்தில் ஜனதிபதியால் முக்கிய வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்படவுள்ளது. இவ்வாறு கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

வவுனியா மன்னார் மாவட்ட 4 முக்கிய குளங்களின் பரிபாலனத்தைக் கவனிக்க

## மத்திய அரசின் நீர்ப்பாசன அலுவலகம வவுனியாவில் விரைவில் திறக்கப்படவுள்ளது

மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகமொன்று வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த அலுவலகம் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளம், அகத்திமுறிப்புக்குளம், வியாழிக்குளம் மற்றும் வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம் ஆகிய நான்கு பிரதான குளங்களின் பரிபாலனத்திற்கும் பொறுப்பாக இருக்கும்.

இந்த நான்கு குளங்களும் அனுராதபுரப் பகுதிகளிலிருந்தே புராதனக் காலங்களில் நீரைப்பெற்று வந்ததினால் அவை வடமத்திய மற்றும் வட - கிழக்கு மாகாண சபைகளுக்குப்பொதுவானவையாகக் கருதப்பட்டு அவற்றின் பராமரிப்பு மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் அண்மையிற் கொண்டுவரப்பட்டிருந்தன.

இதனால் வட - கிழக்கு மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வவுனியாப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரின் பொறுப்பிலிருந்து இந்த நான்கு குளங்களும் எடுக்கப்பட்டு அனுராதபுரத்தில் இயங்கி வரும் மத்திய அரசின் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க ஏற்கனவே முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்ததை கண்டித்து முரசொலி செய்தியும் ஆசிரியர் தலையங்கமும் வெளியிட்டிருந்தது.

எனினும் இவற்றின் நிர்வாகத்தை அனுராதபுரத்திலுள்ள அலுவலகத்திடம் கையளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தற்பொழுது அனுராதபுரத்தை ஒத்த மத்தியஅரசின் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகமொன்றை வவுனியாவில் திறந்து அதன் நிர்வாகத்தின் கீழ இந்த நான்குகுளங்களும் கொண்டு வரப்படவுள்ளன.

இப்புதிய அலுவலகத்திற்கென தனியான கட்டடமொன்று அமைக்கப்படும் வரை வவுனியாவிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளரின் அலுவலக கட்டடத்தின் ஒருபகுதியில் இவ்வலுவலகம் இயங்கும்.

வவுனியா, மன்னார் ஆகிய இரு மாவட்டங்களிலுமுள்ள 75 வீதமான வயல் நிலங்களுக்கு மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நான்கு குளங்களிலிருந்தே நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டுக்கடிதங்கள்மறைவு; தபாற்பகுதி மௌனம்சாதிப்பு

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் காசோலைகள் என்பன மறையும் நிலை தற்போது நாளுக்கு நாள் அதிகரித்தேவருகின்றது.

பதிவு செய்யப்பட்ட கடிதங்களே உரியவரிடம் போய்ச் சேராது மர்மமாக மறைகின்ற வேளையில்சாதாரணத்தபால்களின் நிலைமை எண்ணிப் பார்க்க முடியாதளவு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து இலங்கைத் தபால் திணைக்களம் எவ்வித நடவடிக்கையினையும் இதுவரை மேற் கொள்ளவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

பல மைல்களுக்கு அப்பால் பாடுபட்டுஉழைத்தபணத்தை உறவினரிடம் சேர்க்க முடியாத நிலையில் வெளி நாட்டு இலங்கையர் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானொலியின் இன்று

01-05-90 செவ்வாய்

காலை

- 5.05 தோத்திரமாலை-காமாட்ஷியம்மன் சுப்ரபாதம்
- 5.30 பாமாலை-முருகன் பிள்ளைத்தமிழ்
- 8.00 பேட்டி-உல்லாசப் பிரயாணக்கிராமிய தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமான்
- 8,00 மேதின மெல்லிசைப்பாடல்கள்

பகல்

- 10.00 உரைச்சித்திரம்-உழைக்கும்கரங்கள்-பிரான்சிஸ் ஜோசப்
- 10.30 மேதினச்செய்தி-கைத்தொழிற்துறை ராஜாங்க அமைச்சர் எம்.எஸ் செல்லச்சாமி
- 10.45 கெஞ்சிற் கச்சேரி
- 11.15 மேதின விசேட மெல்லிசைப் பாடல்கள்
- 11.30 மேதின அபிப்பிராயங்கள் சஞ்சிகை நிகழ்ச்சி

மாலை

- 6.15 சைவநெறி
- 6,30 பொலிசாரும் நாமும் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுப்பிரிவினரின் ஆதரவில் இடம் பெறும் நிகழ்ச்சி
- 6.45 கத்தோலிக்கக்கிறிஸ்தவச்சிறுவர் நிகழ்ச்சி
- 7.00 இளைஞர் மன்றம் நடத்துபவர் த. தேவதாஸ்
- 7.30 சிலப்பதிகார யாத்திரை பேராசிரியர் பொ.பூலோகசிங்கம்

இரவு

- 9.30 குரல்வகை
- 10.00 தாளவாத்தியக் கச்சேரி ரி.இரத்தினம்
- 10.30 மெல்லிசைப்பாடல்கள்
- 10,45 பஜன்பித்துக்குளி முருகதாஸ்

மே தினத்தை முன்னிட்டு

## சகல திரை அரங்குகளிலும் இன்று சலுகைக் கட்டணம்

கடந்த வருடங்களைப் போன்றே இவ்வருடமும் மே தினக் கொண்டாட்டங்களுக்கான சலுகைக்கட்டண படக்காட்சிகளை காண்பிக்குமாறு இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் சகல தியேட்டர் உரிமையாளர்களையும் கேட்டுள்ளது.

இத்தினத்தில் சகல வகுப்புக்களும் ஒரே சீரான கட்டணமாக இரண்டு ரூபா மட்டுமே அறவிடப்படும்.

ரூபா இரண்டு பெறுமதியான டிக்கட்டுக்கள் கைவசம் இல்லாவிடில் ரூபா ஒன்றுக்கு மிக அண்மைய பெறுமதியான டிக்கட்டுக்களை அல்லது கீழ் வகுப்பு அரை டிக்கட்டுக்களை உபயோகிக்கலாம் எனவும் இத்தினத்தில் வழமையான கட்டணத்தை அறவிடக் கூடாது எனவும் திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## கோழிகளுக்கு தூங்கல்நோய்; கோழிமுட்டை விலை அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாயின் மத்திய பகுதியில் கோழிகளுக்கான நோய் அதிகரித்த வண்ணமுள்ளது.

தூங்கல் நோய் காரணமாக திடீரென இவைகள் கீழே விழுந்து இறந்து விடுகின்றன, இதனால் தற்சமயம் இப் பகுதியில் அதிகளவில் கோழிகள் மடிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சந்தையில் கோழி முட்டையின் விலை அதிகரித்துள்ள அதேவேளை கோழியின் விலை திடீரென இறங்கியுள்ளது.

## வரலாற்று பதிவேடு பேணப்படும்

மட்டக்களப்பு சம்பந்தமான வரலாற்றுப் பதிவேடுகளைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு ஆணையாளரிடம் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார், மேலும் பொது நூலகத்தில் கிடைக்கும் நாளேடுகள் சஞ்சிகைகள் முதலியவற்றில் வெளியாகும் மட்டக்களப்பு பற்றிய கட்டுரைகளை சேகரித்தல், இடம் பெறும்,இலக்கிய விழாக்கள், வெளியீடுகள், கலாசார விழாக்கள் என்பனவற்றின் பிரசுரங்களை தேதி வாரியாக சேகரித்தல், நூலகத்தில் நடைபெறும் கலை- இலக்கிய கூட்டங்களின் புகைப்படங்களை பேணுதல் என்பன தொடர்பான நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.



—என்ர மனுஷி வழிமேல் விழி வைத்து இண்டைக்கு என்னை பார்த்துக் கொண்டிருப்பாள்.

—ஏன் மனுஷிக்கு உம்மில் அவ்வளவு பாசமோ?

--இல்லை இண்டைக்கு தான் எனக்குச் சம்பளம், அதனால் தான்.

யாழ். தொழில் திணைக்களத்தினால்

# தையல் பயிற்சி பெற்றோருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்

யாழ்.தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தையல் பயிற்சியை முடித்துக் கொண்ட யுவதிகளுக்கு சுய தொழிலில் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கோடு கடன் அடிப்படையில் தையல் இயந்திரங்களை வழங்கும் நடவடிக்கையில் யாழ். தொழில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளில் உள்ள பதினொரு பயிற்சி நிலையங்களில் ஒன்பதுமாதகால தையற் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ்களை மட்டும் வழங்காது இலங்கைவங்கி, மக்கள்வங்கி மூலம் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தொண்டர் ஸ்தாபனங்களின் உதவிகளை நாடவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது,

கடன் அடிப்படையில் பெறும் இக்கடனைத் தவணை முறையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது, இத் திட்டம் முதலில் பருத்தித்துறை தொகுதியில் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

முல்லையடி ரான்ஸ்போமர்;

# ஏழு இலட்சம் ரூபா செலவு, 2வருடமாகியும் இயங்கவில்லை

வலி தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப- அலுவலகப் பகுதியிலுள்ள முல்லையடி என்ற இடத்தில் சுமார் ஏழு இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றி (ரான்ஸ்போமர்) இரண்டு வருடங்களாகியும் இதுவரை திறந்து வைக்கப் படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மின்மாற்றி இயங்கும் பட்சத்தில் இப்பகுதியில் நீண்ட காலமாக மங்கிய ஒளியில் செயற்படும் மின் விளக்குகள் பிரகாசம் அடைவதுடன் மேலும் பல பகுதிகளுக்கு மின்சார விநியோகம் வழங்கக் கூடியதாக இருக்கும் என்று கருத்து தெரிவிக்கப்படுகின்றது (13)

## மயிலங்கூடல் உற்சவம்

மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 27-ம் திகதி ஆரம்பமாகியது.

மேற்படி ஆலயஉற்சவத்தை முன்னிட்டுஆலயத்தில் சைவச் சொற்பொழிவுகளை பல சைவ அறிஞர்கள் ஆற்றிவருகிறார்கள். (25)

## பதவி உயர்வு

மன்னார் கச்சேரி கணக்குக் கிளையில் கடமையாற்றிய திரு·எஸ். தர்மரத்தினம் மன்னார்பட்டினம் கோட்ட உதவி ஆயைணாளர் அலுவலகத்திற்கு பதவி நிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.(17)

குழுக்கூட்டத்தில் தீர்மானம்

# பாதிக்கப்பட்ட இளைஞருக்கு கிளியில குடியேற்றத் திட்டம்

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டம் கிளிநொச்சி குருகுலத்தில் இந்து இளைஞர் பேரவையில் தலைவர் திரு. வ.முருகப்பன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கையின் சகல மாவட்டங்களிலிருந்தும் பலபிரதிநிதிகள் கலந்து கொண்டனர் மேற்படி கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சியில் இந்து இளைஞர் பேரவைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் செயலகம் கட்டுதல் பாதிக்கப்பட்ட இந்து இளைஞர்களுக்கு கிளிநொச்சியில் குடியேற்றத்திட்டம் அமைத்தல் யாழ்ப்பாண நகருக்கு வரும் இந்து சமயாத்திரிகள் தங்கிச் செல்வதற்கு இந்து இளைஞர் விடுதி ஒன்றை அமைத்தல், 'இந்து இளைஞன்' பத்திரிகையைத் தொடர்ந்து மாத இதழாக வெளியிடுவது மேற்படி தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கான குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (38)

## சடலங்களை புதைக்க இடம் தேவை

யாழ் அரசினர் வைத்தியசாலையில் அநாதரவாக இருக்கும் சடலங்களைத் தகனம் செய்வதற்கு மயானம் ஒன்றினை ஒதுக்கித் தருமாறு யாழ் போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் யாழ் அரசாங்க அதிபரைக்கேட்டுள்ளார்.

இங்குள்ள சடலங்கள்இதுவரை காலமும் கொழும்புத்துறையில் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட தனிக் காணியிலே தகனம் செய்யப்பட்டு வந்தது.

குடிசனமும் கோவில்களும் நிறைந்த அப்பகுதியில் சடலங்களைப் புதைக்க வேண்டாம் என அப்பகுதி இந்து மாமன்றம் கேட்டுக் கொண்டதை யடுத்தே இச்சடலங்களைப் புதைப்பதற்கான புதிய இடம் ஒன்று கேட்கப்பட்டுள்ளது.

# தமிழ்ப் பகுதிப் புனரமைப்புக்கு பிரிட்டிஷ் அரசு உதவும்

தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கப் பிரிட்டிஷ் அரசாங்கமும், மக்களும் முன்வந்துள்ளனர்என பிரிட்டிஷ் தூதரகப் புனர் நிர்மாண உதவித் திட்டங்களுக்கான செயலாளர் செல்வி ஜோன் கோர் பீல்ட் தெரிவித்துள்ளார்.

புனர் வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது வடபகுதி மக்களுக்குச்சகல வசதிகளையும் கொண்ட பொது விளையாட்டரங்குஒன்றையும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விளையாட்டு வீரர்களுக்கு பிரிட்டனில் பயிற்சி யளிக்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## அம்மன் ஆலயம் புனரமைப்பு

(சங்கானை)

சுழிபுரம் சிறீ பத்திரகாளி அம்மன் ஆலயம் பல இலட்ச ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இவ்வாலயத்தில் பாலஸ்தாபனம் நான்காம் திகதி வெள்ளிக் கிழமையன்று நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரம்மசிறீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் இப் பாலஸ்தாபன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அச்சுவேலியில் இன்று

# தொழிலாளர் பாதுகாவலர் புனிதவளனார் திருவிழா

உலகத் தொழிலாளர்களின் பாதுகாவலராகப் புனித சூசையப்பர் கத்தோலிக்கத் திருச்சபையின் பாப்பரசர் 12 ஆம் பத்திநாதரால் 1955 ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டார். அன்று முதல் உலகத்தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி உலகில் உள்ள கிறிஸ்தவர்கள் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வகையில் வடபகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான அச்சுவேலி அச்சுநகர் புனிதவளனார் ஆலயத்தில் வருடாந்தம் மேதினத்தன்று புனித சூசையப்பர் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மையான விவசாயக் குடிகளைக் கொண்ட விவசாயப் பிரதேசமான அச்சுவேலிப் பங்குத் தொழிலாளர்கள் தம் பாதுகாவலரான புனித சூசையப்பரின் விழாவை இவ்வசந்தகால ஆரம்பத்தில் கொண்டாடுவது பொருத்தமானதும், சிறப்பானதுமாகும்.

இன்று அச்சுவேலி புனிதவளனார் ஆலயத்திற் காலை 6. 30 மணியளவில் பங்குத்தந்தை அருட் திரு. லெக்னோ அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெறவுள்ளது.

## ரூபவாஹினியில் தமிழ் ஒளிபரப்பு மே 20 முதல்

இலங்கை ரூபவாஹினில் கடந்த சித்திரை வருடப் பிறப்புடன் பிரதி ஞாயிறு தோறும் இரண்டு மணிக்கு ஆரம்பமாக விருந்த தமிழ் ஒளிபரப்புக்கள் மே மாதம் 20ம் திகதி முதல் ஆரம்மமகவிருக்கின்றது.

விளம்பர நிலையத் தயாரிப்பில் ஏற்பட்ட தாமதம்காரணமாகவே குறிப்பிட்ட நாளில் மேற்படி நிகழ்ச்சி ஆரம்பிக்க முடியாது போய் விட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென். ஜோன்ஸ் அலுவலகம்

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை காரியாலயம் உருத்திரபுரத்தில் அமைப்பதற்கு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை உறுப்பினர்கள் அனைவரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு கின்றனர்.

# வன்னிச் செய்திகள்

## தேனிசை நிகழ்ச்சி

தமிழக எழுச்சிப்பாடகர் தேனிசைச் செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி முல்லைத்தீவுத் திறந்தவெளி அரங்கில் எதிர்வரும் 3 ந்திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும். இவற்றிற்கான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் கலை, கலாசாரப்பிரிவுஒழுங்கு செய்துள்ளது.

## முல்லையில்புதிய பாடசாலைகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில்மேலும் இரு பாடசாலைகள் இம்மாவட்டக் கல்விப்பணிப்பாளரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பாடசாலைகள் பாலப்பாணி, வவுனிக்குளம் 6ம் கட்டை ஆகிய கிராமங்களில் அமைப்பதற்கு மேலிடத்தினால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

## இடிதாக்கிப் பெண் காயம்

கடந்த சனிக்கிழமை மாலை மழை பெய்து கொண்டிருந்த வேளை திடீர் என விழுந்த இடியால் செட்டிக்குளம், கற்சாரம் குளம் பகுதியில் உள்ள பதின்மூன்று வயதுப் பெண் ஒருவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்.

இவர் சிசிச்சைக்காக தற்பொழுது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கடன் வழங்கப்பட்டது

வவுனியா நகர வளர்பிறைச் சிக்கன கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்கள் 32 பேருக்குக் கடன் வழங்கியுள்ளது.

சுய தொழில் முயற்சிக்காக ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கியிருப்பதாக இச் சங்கத்தின் பொருளாளர் ஜனாப் ஏ. ஜி. நவரஸ்தீன் முரசொலிக்குத் தெரிவித்தார்,

வவுனியா தெற்குத் தமிழ்ப்பிரிவுச் சிக்கன கூட்டுறவுச் சங்கத்தின் சமாஜத்தலைவர் திரு, எஸ். கப்பிரமணியம் இவர்களுக்குரிய காசோலைகளை வைபவரீதியாக வழங்கினார். என்பது குடிப்பிடத்தக்கது (11)

## வவுனியாவில் பாதயாத்திரை

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களுக்குமான சமய எழுச்சியினை ஏற்படுத்தும் நோக்குடன் சமாதான சமயப் பாதயாத்திரை திட்டமிட்டபடி நடைபெறும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவிலிருந்து இந்தசமயப்பாத யாத்திரை ஆரம்பமாகி மே மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில் முடிவடையும்.

இது தொடர்பான சகல ஏற்பாடுகளையும் அந்ததப் பகுதி கிராம சேவையாளர்கள் செய்யும்படி பணிக்கப்பட்டுள்ளனர் என கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நிலம், நீர் உண்டு- பணம் இல்லை

குளங்களில் நீர் இருந்தும், போதிய நிலமிருந்தும், பொருளாதாரப் பிரச்சனை காரணமாக நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள சின்ன அடம்பன், ஆயிலடி நயினமடு அனர்ந்தர், புளியங்குளம் ஆகிய கிராம மக்கள் பலர் கடந்த ஆண்டு கால போக நெற் செய்கையில் ஈடுபடவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

வசதியுள்ளவர்கள் மட்டுமே நெற் செய்கையில் ஈடுபட்டனர் எனவும் வறுமைக் கோட்டிற்குள் இருந்தவர்கள் தமது நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளளது.

## அகதிகள் குடியமர்த்தப்பட்டனர்

வன்செயல் காரணமாக பாதிப்படைந்து கடந்த ஒரு வருட காலமாக ஓமந்தை நலன் புரிச் சங்கத்தில் தங்கியிருந்த அனைத்து அகதிக் குடும்பங்களும் பணிக்கர் புளியங்குளம், மாணிக்கர் வளவு போன்ற இடங்களிற் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான புனர் வாழ்வுத் திட்ட வேலைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## வாகன விபத்து அதிகரிப்பு

கடந்த சனிக்கிழமை வவுனியா நகரில் இடம் பெற்ற வெவ்வேறு வாகன விபத்தில் ஆறுபேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அமனுதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டராங்கள் கூறின.

அண்மைக்காலமாக வவுனியா நகரில் வாகன நெருக்கடியும் சன நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

இங்கு போக்குவரத்து விதிகளை எவருமே கவனிப்பதாகவில்லை இதனாலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது. (11)

## சங்கங்களுக்குப் புதிய லொறிகள்

முல்லைத்தீவு, மாவட்டத்தில் முல்லைத்தீவு, முத்துஐயன் கட்டு, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய லொறிகள்வழங்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த லொறிகள் முல்லைத்தீவு செயலகத்தினால் பங்கிட்டு வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றுக்கும் புதிய லொறிகள் வழங்கப்படவுள்ளன.

1988, 89ஆம் கல்வியாண்டில்

# வடக்கு கிழக்கு மாகாணத்தில் தெரிவான 591 மாணவருக்கு மகாபோல புலமைப்பரிசு

வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 591 பேருக்கு 881,89 ஆம் கல்வியாண்டில் 'மஹா பொல' புலமைப் பரிசில் நிதி கிடைத்துள்ளது.

நாடு பூராகவும் இக்கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 6000 மாணவர்களில் 3400 பேருக்குஇப்புலமைப் பரிசில் நிதி கிடைத்துள்ளது.

வடக்கு கிழக்கு பகுதியில் மாவட்டாரீதியில் புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்டோர் தொகை வருமாறு.

யாழ்ப்பாண மாவட்டம். 302 பேர்,கிளிநொச்சி மாவட்டம். 15 பேர்,மன்னார்மாவட்டம் 23 பேர்,முல்லைத்தீவு மாவட்டம் 20பேர்,வவுனியா மாவட்டம் 17 பேர், திருகோணமலை மாவடடம்,50 பேர் மட்டக்களப்பு மாவட்டம் 58 அம்பாறை மாவட்டம் 106, பேர்.

1990-91 ஆம் கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களுக்குவழங்கப்பட இருக்கும் புலமைப் பரிசில்களின் தொகை அதிகரிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

மஹா பொல புலமைப் பரிசில் கிடைக்காத வறிய மாணவர்களுக்கு ''மாணவர் உதவிப்பணம்'' அந்தந்த பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்றது.

மஹாபொல கொடுப்பனவுத் தொகையும் உதவிப் பணக் கொடுப்பனவுத் தொகையும் சமமானதாகும். அதாவது மாதாந்தம் ஒரு மாணவனுக்கு 500 ரூபா என்ற அடிப்படையில், வருடத்தில் பத்து தவணைகளுக்கு வழங்கப்படுகிறது. (ப 11)

## வட ம.கிழக்கில் புனரமைப்பு இல்லை

வடமராட்சி கிழக்கின் பிரதான இடமாக விளங்கும் மரதங்கேணி பொதுச்சந்தையும் அதன்பகுதிகளும் புனரமைப்பு செய்யாமல் இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் கவலை கொண்டுள்ளார்கள்

இவ்விடயம் சம்மந்தமாக இப் பகுதிப் பொதுஸ்தாபனங்கள் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட இந்த சந்தைக் கட்டிடங்கள் இன்னமும் திருத்தப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (43)

## நாய் பிடிக்க ஊழியர் நியமனம்

(சுண்டிக்குளி)

கட்டாக்காலி நாய்களினால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைக் குறைக்கவும் விசர் நாய்க்கடித் தொல்லையைக் குறைக்கவும் யாழ் மாநகரசபை கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்குமுகமாக நாய்களைப் பிடிக்கவென ஊழியர்களை நியமித்து இப்பணியை யாழ் மாநகரசபை துரிதமாக மேற் கொண்டுள்ளது. நாய் பிடிக்கும் ஊழியர்கள் அரியாலைப்பகுதியில் கட்டாக் காலியாகத்திரிந்த பெருந்தொகையான நாய்களைப் பிடித்து அதற்கென அமைக்கப்பட்ட வண்டிகளில் ஏற்றிச்சென்றனர்.

## ஓய்வு பெற்றார்

சங்கானை ஸ்தான அ.மி.த'க.பாடசாலையில் சுமார் பதினெரு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய அதிபர்திரு.மு.சுப்பிரமணியம் தமதுமுப்பத்தொரு வருட ஆசிரிய சேவையை சிறப்பாக முடித்துக்கொண்டு இளைப்பாறியுள்ளார்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர்,நுவரேலியா சாந்தமேரி அ.த.க.பாடசாலை, குருநாகல் மூவான்கந்தை அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் உதவியாசிரியராகக் கடமை புரிந்துள்ளார்.தொடர்ந்துசங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பதில் அதிபராகவும் சங்கானைஸ்தான அ.மி. த.க.பாடசாலையில் நிரந்தர அதிபராக பதினெரு வருடங்களும் சேவைசெய்து மாணவர் பெற்றோர், மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர்.(12)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடத்தும்

# மட்டக்களப்பில் இன்று மாபெரும் மே தின ஊர்வலம்

மட்டக்களப்பில் மே தினக் கொண்டாட்டங்களுக்கான விரிவான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மங்கள் முன்னணி செய்துள்ளது.

மேதினமான இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 1 மணியளவில் மட்டுநகர் முகத்துவார வீதியிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனச் சந்தியிலிருந்து மாபெரும் தொழிலாளர் பேரணி புறப்படும். அரிசி ஆலையவீதி கல்முனை வீதிவழியாக கல்லடிப்பால சந்தியை ஊர்வலம் அடையும்.

அங்கிருந்து அருகே மட்டக்களப்பு வாவியில் மீனவ தொழிலாளர்களின் தோணிகளின் பவனி இணையாக தொடர தொழிலாளர் பேரணி வாவிக் கரையோரமாகவுள்ள லேடி மனிங் டிறைவ் வீதி வழியாக கோட்டை முனைப்பாலத்தை அடையும்.

அங்கிருந்து முனை வீதி, வாவிக்கரை வீதி, முற்றவெளி பிரதான வீதிவழியாக காந்தி சதுக்கத்தில் நடைபெறும் மாபெரும் மே தினப் பொதுக் கூட்டத்தை வந்தடையும்.

இப் பேரணியில் தொழிலாளர் அடக்கும் முறைகளையும், இந்திய இராணுவத்தின் அடாவடித் தனங்களையும் சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளும் இடம் பெறும்.

## இறுப்பிட்டியில் தண்ணீர்ப் பஞ்சம்

புங்குடுதீவு- இறுப்பிட்டி பகுயில் தண்ணீருக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலைகளினால் அப்பகுதி மக்கள் பெரும்சொல்லொணா துயரத்தினைஎதிர்நோக்கி வருகின்றார்கள்.

இப் பகுதிகளுக்கு பவுசர்கள் மூலமாக குடிநீரைக் கொண்டு திரிந்து விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை யென தெரிவிக்கப்படுகிறது. (20)

## பற்றாக்குறை நீங்கியது

மன்னார் ஆதார வைத்திய சாலையில் நிலவிய மருந்தாளர் பற்றாக்குறை நீங்கியுள்ளது. ஏழு மருந்தாளர்கள் சேவை செய்ய வேண்டிய இடத்தில் தற்போது ஆறு மருந்தாளர்கள்கடமையாற்றுகிறார்கள். மருந்தாளர் பற்றாக்குறை நிலவுவதாக ''முரசொலி'' ஏற்கனவே செய்தி வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (17)

## புத்தளத்தில் கைதானோர் விடுதலை

கடந்த வாரம் புத்தளம் கறபிட்டியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் புத்தளம் முப்படைகளின் இணைப்பதிகாரியால் விடுதலை செய்யப்பட்டனர்.

# சுவையான செய்திகள்

## நெப்போலியனின் கண்ணின் வலிமை

மாவீரன் நெப்போலியன் மிகவும் குட்டையானவர். அத்துடன் மிகச் சிறிய வாயும், சிறிய கண்களும் உடையவர். தன்னைப் பார்க்கின்றவர்கள் தன் கண்களைத் தான் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடையவர். அந்தக் கண்களிலிருந்து ''எனது தன்னம்பிக்கையையும், துணிவையும் பாருங்கள்'' என்று கூறுவாராம். கண் புருவங்களுக்கு அடர்த்தியாக மை பூசிக் கொள்ளும் பழக்கமும், இவரிடம் இறுதி வரை இருந்தது.

## நீர், வேர், எல்லாம் எதற்கு

பெரு நாட்டுக் கடற்கரை அருகில் உள்ள பாலைவனத்தில் 'டிலண்ட்ஸியா' என்ற பாசியினச் செடியால் எழுதப்பட்ட செய்தி ஒன்று 50 ஆண்டுகளாக அப்படியே தெளிவாகக் காணப்படுகின்றது. இதற்கு நீரோ-வேரோ கிடையாது. இவை இரண்டும் வேண்டவும், வேண்டாம். இந்தப் பாசியினச் செடி மணலில் இறுகப் பற்றிக் கொள்ளும் தன்மையுடையது.

## ஒரு சுடுகாட்டின் சாதனை

உலகிலே அதிகப்பேர்களைத்தகனம் செய்த பெருமையுடைய 'தி கோல்டர்ஸ் கிரீன் கிரிமேட்டோரியம்' என்ற சுடுகாடு லண்டனில் இருக்கின்றது. 1902 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 2, 64, 312 பேர் இங்கே எரிக்கப் பட்டு தகனம் செய்யப்பட்டார்கள். 1957 இல் மட்டும் 7509 பேர்கள் இங்கே தகனம் செய்யப்பட்டது. இது ஒரு சுடுகாட்டுச் சாதனையாகும். இந்த சுடுகாட்டுச் சாதனையை எமது வீதிகள் முறியடிக்காதிருந்தால் சரி.

# முரசொலிக்கு வந்த கடிதம்

## யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் விளக்கம்

ஆசிரியர்
முரசொலி

தங்கள் 21.4.1990 நாளிதழில் பக்கங்கள் நான்கு,ஐந்தில் 'யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் நாற்பதாவது ஆண்டு' என்ற தலையங்கம் தொடர்பாக எமது ஆட்சேபத்தையும் உதைபந்தாட்டத்தோடு தொடர்புள்ளவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய தவறான கருத்துக்களை நீக்கும் பொருட்டு தயவு செய்து இதை தங்களது பத்திரிகையில் பிரசுரிக்கும்படி வேண்டுகின்றோம்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் முதலாவது தலைவராக 1949 ல் கடமையாற்றியவர் திரு. டபிள்யூ ஜீ, ஸ்பென்சர் யாழ்ப்பாண நீதிபதியாவார் அப்பொழுது செயலாளராகக் கடமையாற்றியவர் திரு. வி. சுப்பிரமணியம் ஆவார். இவ்வாறு ஆரம்பமான சங்கத்தின் விபரங்களை திரு. இ. கே. குமரையா அவர்கள் அறியாதிருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

அவர் இப்பொழுது தலைமைதாங்குகின்ற மத்தியஸ்தர் சங்கம் வேறு, 1949 ல் ஆரம்பிக்கப்பட்ட மத்தியஸ்தர் சங்கம்வேறுஆகும் 1949ல்ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தில் டபிள்யூ ஜீ.ஸ்.பென்சரை தொடர்ந்து திரு.பி. சிறீஸ்கந்தராசாமாவட்ட நீதிபதி, திரு. இ. சபாலிங்கம், திரு. ரி. சேனாதிராசா, ஆகியோர். தலைவர்களாக கடமையாற்றினார்கள் இவர்களுக்குப் பின் தலைவராக வந்த திரு. இ. கனகலிங்கம் இன்றுவரை தலைவராக இருக்கின்றார்.

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம், யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் என்ற பெயர் அங்கீகாரத்தோடு இன்றுவரை செயபற்ட்டு வருகின்றது. இச்சங்கத்தில் இருந்து பிரிந்து சென்ற திரு. இ. கே.குமரையா போன்ற சிலர் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து ஒரு புதிய மத்தியஸ்தர் சங்கத்தினை உருவாக்கினார்கள். எங்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டைத் தங்கள் புதிய சங்கம் ஆரம்பித்த ஆண்டாக எடுப்பதற்கு அவர்களுக்கு எவ்வித அருகதையுமில்லை.

1981 ஆம் ஆண்டு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது என்ற கூற்றில் எந்தவித உண்மையுமில்லை. அக்கூட்டத்தில் எமது சங்க அங்கத்தவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. 1949 தொடக்கம் இன்றுவரை நாம் தனித்தே இயங்கிவருகின்றோம்.

எமது சங்க இன்றைய தலைவர் திரு. இ, கனகலிங்கம் எமது சங்கப் பிரதிநிதியாகத்தான் 1969- 70 ம் ஆண்டிற்கு இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார் என்பதைநினைவுறுத்த விரும்புகின்றோம்.

1979 புரட்டாதி மாதம் 9 ம் திகதி திருகோணமலை மத்தியஸ்தர் சங்கத்தை இங்கு அழைத்து யாழ், இந்துக் கல்லூரியில் ஓர் கருத்தரங்கத்தையும், புதிர்ப் போட்டியையும் நடாத்தியது யாழ். மாவட்ட உதைபந்தாட்டமத்தியஸ்தர்கள் சங்கமேயாகும். இக்கருத்தரங்கிற்கு இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் திரு. ரி. பேரின்பநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

1982 யூலை 22 ம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன் இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன், ஜேர்மன் தேசத்து திரு. ஆர். முல்லர் அவர்களை அழைத்து எமது சங்க ஆதரவின் கீழ் மத்தியஸ்தர்களுக்கு பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையில் வகுப்புக்களை நடாத்தி நற்சான்றிதழ்களை வழங்கியதையும் நினைவுறுத்த விரும்புகின்றோம்.

அப்போது டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் அவர்கள் முக்கிய பங்களித்து உதைபந்தாட்டத் திடலில் ஏற்படும் ஊறுகளும் அதற்குரிய முதலுதவிகளும், உணவும், உடலுறுதிகளும் என்னும் தலையங்கங்களில் விரிவுரைகளை நடாத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1986 ம் ஆண்டு பாஷையூர் மைதானத்தில் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிக்கு, யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் மத்தியஸ்தம் வகித்ததை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். இதனை டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் அவர்கள் நன்கு அறிவார்கள்,

வருடா வருடம் கலந்துரையாடல் வகுப்புக்களை நடாத்தி வருவது எமது சங்கமே ஆகும், 1989 நவம்பரில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்றை எமது சங்கம் நடாத்தியது. இக்கலந்துரையாடலில் திருவாளர்கள் இ. கனகலிங்கம், கே. நாகமணி, எம். பத்மநாதன்,சற். சிங்கராஜர், எஸ். எம். மார்டின், சி. எஸ், அருள்பிரகாசம், ரி. அருணகிரிராஜா, ஆர். மகேந்திரன் ஆகியோர் பங்குபற்றித் தேவையான விளக்கங்களை வழங்கினார்கள்.

கடந்த 40 ஆண்டுகளாக இயங்கி வருவது யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கமேயாகும். எமது சங்கத்தின் வரலாற்றையும், செயற்பாடுகளையும் புதியதொரு சங்கம் தனதாக்கிக்கொள்ள நினைப்பது உண்மைக்குப் புறம்பானதும், நியாயமற்றதுமாகும்.

திரு. என். சோமசுந்தரம்
(செயலாளர்)
யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
கேட்டுப் பயனில்லை – நாமாகவே பெறவேண்டியது தான் என்ற நிலைக்கு வந்த சர்வதேச தொழிலாளர் வர்க்கம் 1847 இல் இருந்து '8மணித்தியால சட்டப்படி வேலை' கோரிக்கையை முன் வைத்து 1886 மே1ம்நாள் சிக்காக்கோ நகரில் வரலாற்று திருப்பத்தை ஏற்படுத்திய நாளே, இரண்டாவது அகிலத்தின் பின் 1890 மே 1 முதலாவது சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டது. ஒரு நூற்றாண்டு நிறைவை இன்றுநாம் நினைவில் கொள்ளுகிறோம்.

இலங்கைத்தீவின் முக்கிய பாட்டாளி வர்க்கமான மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முதலாளித்துவத்தின் பிரித்தாளும் தந்திரத்தினால் வர்க்க ஒற்றுமையை இழந்து இனவாத முத்திரை குத்தப்பட்டு தமது உரிமைகளை இழந்துள்ளார்கள். மலையகக்களின் நியாயமானகோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்று கொடுப்பதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் குரல் கொடுப்பதுடன் வடக்கு கிழக்கு விவசாயத் தொழிலாளர்களும், மலையக மக்களுடன் கைகோர்த்து எழ வேண்டும். முதலாளித்துவத்தின் சதியான இன சகதியில் இருந்து மீண்டும் வர்க்க ஒற்றுமைக்காய் அறை கூவல் விடுக்கின்றோம்.

இலங்கைத் தீவின் தேசிய வருமானத்தில் வருடாவருடம் 600 கோடி ரூபாய் வருமானமாக உழைத்துக்கொடுப்பவர்கள் மலையக தொழிலாளர்களே. இவர்களின் உழைப்பிலே இலங்கைத்தீவு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு இன்று நாள் சம்பளமோ அல்லது மாதச் சம்மளமோ வழங்கப் படுவதில்லை. நாள் சம்பளம் பொதுவாக நடைமுறையில் ஆகக் குறைந்தது 75 ரூபா வழக்கத்தில் இருந்துவருகிறது மாதச் சம்பளம் 2500 ரூபா வரை ஏனையோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந் நிலையில் தோட்ட தொழிலாளரின் சம்பளம் அதிகரிக்கப் படாததால் அவர்கள் வறுவையில்வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது சம்பளம் மாதச் சம்பளமாக மாற்றப்பட்டு அதிகரிக்கப் பட வேண்டும்

இலங்கை அரசால் மலையகத்தில் 10 லட்சம் தொழிலாளரின் பிராஜா உரிமை பறிக்கப்பட்ட பிறகு 1964ல் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும், 1974ல் சிறிமா - இந்திரா ஒப்பந்தமும் 1987, ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் ஆகிய உடன் படிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு இன்று உரிமை இழந்து அரசியல் உரிமை மறுக்கப்பட்டு, அந்நியர்களாக கருதப்பட்டு நாடுகடத்தப்பட விருக்கும் அனைவருக்கும்பொதுபிரகடனம் மூலம் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும்

இலங்கைத் தீவில் நெருக்கடி தணிந்து சமாதானத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் இத் தருணத்தில் இலங்கை ஜனாதிபதியின் புதிய அணுகு முறையால் இனப் பிரச்சனை தீர்க்கப்படும் என்று தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். இனப் பிரச்சினையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டு மென்றும். அதே சமயம் தமிழ் பேசும் மக்களுக்கான ஒட்டு மொத்த அரசியல் தீர்வுக்கான அரசமைப்பையும் உருவாக்க வேண்டு மெனவும்:

மலையக தமிழ் மக்கள்பெரும்பான்மையாகவாழும்பகுதிகளில் தனியான தமிழ் அரசாங்க அதிபர் பிரிவும் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும் தனியான கிராம சேவகர் பிரிவும் கொண்டு வர வேண்டு மெனவும் இதன் மூலம் மலையக மக்கள் நேரடியாக அரசுடன் தொடர்பு கொள்வதுடன் தேசிய அரசியலில் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்படும் என்பதால் தனியான தமிழ் நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டு மெனவும்;

மலையக மக்கள் தலை முறை தலை முறையாக வாழ்ந்து வந்த மண்ணில் ஒரு துண்டு நிலம் தானும் வழங்கப்படாமல் மண்ணுக்கே சொந்தம் இல்லாதவர்ாளாக ஆக்கப்பட்டு இருப்பதால் குடியிருக்க காணியும் இருப்பிட வசதியும் செய்து கொடுக்க வேண்டு மெனவும் அரசாங்கத்திடம் கோரிக்கையாக விடுகின்றோம் என இச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


# 13-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 - 07 - 1950



மறைவ
01 - 05 - 1977

## அமரர் குமரையா தேவராஜன்

(உதவி முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்)

நீ ஜெனித்த அன்றிருந்து யாம் அடைந்த மகிழ்ச்சி! நீ மறைந்த அன்றிருந்து இன்றுவரை யாம் அடையும் துயரம் சொல்லித் தீருமா? எல்லாம் வல்ல இறைவா! நின் அருள் வேண்டுகின்றோம். ராஜனின் ஆத்மா சாந்தியடையட்டும்.

துயரால்வாடும்:

அன்னை, தந்தை, உடன் பிறப்புகள், கைப்பிடித்த மங்கை மங்களா, அரும் புதல்வர் டீன், சசீந்திரன், மைத்துனர், மைத்துனியர், மாமன், மாமி.

99/6, சந்தானமாதா கோவில் ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

E. K. குமரையா

05004


## சீருடை இல்லை

வலிதென் மேற்கு பிரதேச சபையிற் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு இதுவரை 1989 - ம் ஆண்டுக்குரிய சீருடை வழங்கப்படவில்லை. இதுபற்றி உயர் அதிகாரிகளிடம் முறையிட்டும் இன்று வரை பலனளிக்கவில்லை.

வலி தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய உப அலுவலங்கள் அடங்கும்

## மின் இணைப்பு வேலைகள்

(முள்ளியான்

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 87ம் ஆண்டு, வேலை தொடங்கியது 89ம் ஆண்டு ஆனாதற்போல 10 வீதமான வேலைகள் மட்டுமே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம் வழங்கும் வேலைகளே இப்படி இருக்கின்றன 2 மைல் நீளமுள்ள பகுதிகளுக்கே இணைப்பு வேலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## இன்ரறக் கழகம் நூல் அன்பளிப்பு

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி இன்ரறக் கழகத்தினர் மாணவரிடையேயும், கழக அங்கத்தினரிடையேயும் சேகரித்த வரலாறு கதை, பொதுஅறிவு, வினா விடைப் புத்தகங்கள் கொண்ட தொகுதிகளை கைதடி சைவ அனாதை இல்லம் கைதடி இரட்சணிய சேனை இல்லம் ஆகியவற்றுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

## தொழிற் சங்கங்...

எமது நாட்டில் ஒழுங்குபடுத்தப் படாத பல துறைகள் உண்டு. உழைக்கும் தொழிலாளர்களில் பெண்கள், சிறுவர், விவசாயத் துறை சார்ந்தோர் சிறப்பாக கவனிக்கப்பட வேண்டியவர்களாவர். இவர்களது வாழ்க்கைத்தரம், சமூக அந்தஸ்து என்பன முன்னேற்றப்பட வேண்டும்.

இன்று தொழிலாளர் கல்வியின் முக்கியத்துவம் பலவாறு உணரப்பட்டு பல தொழிற் சங்கங்களும் தொழிற் கல்வியினை வளர்த்து வருகின்றன. பல நாடுகளிலும் இவ் விழிப் புணர்ச்சி ஏற்பட்டு வருவது தொழிலாளர்களின் முன்னேற்றத்தினைக் காட்டுவதாகும்

தொழில் கல்வி மூலம்- பரஸ்பர தன்னம்பிக்கையினை தொழிலாளர்கட்கும் முகாமைக்கும் இடையில் ஏற்படுத்த முடிவதுடன், ஆக்கபூர்வமான செயற்திட்டங்களையும் கூட்டு அடிப்படையில் செயலாற்ற முடியும். இம்மாற்றங்கள் யாவற்றையும் தொழிற்கல்வி மூலமே பெற முடியும்.


**A / L PHYSICS**

ஆசிரியர்

**R சதசயசீலன்**

B M C முன் லேன்
யாழ்ப்பாணம்.

A / L 0
(MON TO FRI)

8-30 A. M.
திண்மத்தின் விரிவு

9-30 A. M.
அமுத்தமானி

4-30 P. M.
கோளவாடிகள்

ஆரம்பம்
02-05-1990
புதன் காலை
8-30 மணி



## 'முரசொலி'அனுசரணையுடன் வவுனியாவில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

வவுனியா—புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் பன்னிரெண்டாவது வருடாந்த விளையாட்டு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் 19ம்திகதி கழக விளையாட்டு மைதானத்தில் புதுக்குளம் பிரிவு சிற்றூரவையின்ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக 'முரசொலி' அனுசரணையுடன் ஆண்களுக்குரிய 115 மைல் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெறும். இப் போட்டி புதுக்குளம் கழக மைதானத்திலிருந்து ஆரம்பமாகி கண்டி வீதி வழியே பரந்தனை அடைந்து மீண்டும் அதே வழியே ஆரம்ப இடத்தைச் சென்றடையும்.வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தோர் எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இந்தச் சைக்கிள்ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் மட்டும்தமது விண்ணப்பங்களை பூர்த்திசெய்து 17.05.90 க்கு முன்னர் கிடைக்க கூடியதாக கழகச் செயலாளர்,சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் புதுக்குளம் சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இந்தச்சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 'சாலி' மோட்டோர் சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும் இரண்டாம் பரிசாக தொலைக்காட்சிப்பெட்டியும் மூன்றாம் பரிசாக சைக்கிள் ஒன்றும் வழங்கப்படும் அத்துடன் அடுத்து வருவோருக்கு மேலும் எட்டு விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

முரசொலி அனுசரணையுடன்
வவுனியா -- புதுக்குளம்
சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம நடாத்தும்

### 12-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி

### 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிக்குரிய விண்ணப்பம்

முழுப்பெயர் ....................................................

விலாசம் ....................................................

மாவட்டம் ....................................................

அதிர்ஷ்ட இலக்கம் ....................................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு கழகம் பொறுப்பாளி அல்ல என்பதினை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி　　　　விண்ணப்பதாரியின் ஒப்பம்



யாழ் மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம்

## பாணின் ஆகக் குறைந்த நிறை 350 கிராம்

8.4.1990 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத் தீர்மானத்தின்படி பாணின் ஆகக் குறைந்த நிறை 350 கிராம் ஆக இருக்கவேண்டும். இது 1.5.1990 இல் இருந்து அமுலுக்கு வரும் என்பதை சங்க அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பேக்கறி உரிமையாளர்கள் இதுவரை தம்மை அங்கத்தவர்களாகப் பதியாதவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் எமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்.

**செயலாளர்**

130 கண்டி வீதி,
கச்சேரி, .
யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட
பேக்கறி உரிமையாளர் சங்கம்
05006

# யாழ். நகரில் மாபெரும் மேதினக் கூட்டம்

இம் முறை யாழ் மாவட்ட தொழில் சங்கங்கள் யாவும் ஒன்றிணைந்து பிரமாண்டமான முறையில் மேதினத்தை கொண்டாடுகின்றன.

சகல தொழில் சங்கங்களும் விடுதலைப்புலிகளின் கீழ் ஒரே அணியாகத்திரண்டு மேதின ஊர்வலம் கூட்டம் என்பனவற்றை நடாத்துகின்றன.

இன்று நடைபெறும் மேதினம் கண்காட்சி, ஊர்வலம் கூட்டம் என்று மூன்று பகுதிகளாக இடம்பெறுகின்றன.

இன்று பகல் யாழ் மத்திய கல்லூரியில் மேதினக் கண்காட்சி நடைபெறும்.

தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம், தீவுப்பகுதி, போன்ற பகுதிகளில் இருந்து மேதின ஊர்வலங்கள் இன்று புறப்பட்டு மாலை 4.30 மணியளவில் யாழ் மத்தியகல்லூரி மைதானத்தை வந்தடையும்.

மாலை 5மணியளவில்யாழ் முற்றவெளியில் இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் உரையாற்றுவார்கள்.

திரு. அன்ரன் பாலசிங்கம் திரு. யோகி யோகரட்னம் திரு. பானு, திரு. ஸ்ரான்லி டொமினிக், ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள்.

இக்கூட்டம் யாழ் மாவட்ட விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் மாலினி தலைமையில் இடம் பெறும். (03)

## ஓ...! மேதினமே..,!!



துஞ்சிவரும் பாட்டாளி
துயரேறி மிதித்தாலும்,
அஞ்சி விழுகின்றான்
அவலம்;
கஞ்சிவரும்
காலம் எது தோழா?
காத்திருந்த மேனியதன்
கோலஞ் சிவப்பாகிக்
கொளுத்து!

★

எலும்போடு தோலுரசி
எழுந்தாலும் உழைப்பென்று
தழும்போடு விழுகின்றாய்
தவித்து;



★

எழும் போதோ,
நீவளர்த்த பூமியிதில்
நீவாழ வழியிலையேல்,
தீவளர்த்து வாடா
திளைத்து!

★

புயலெனச் சீறி வீசிப்;
புல்லரை உமிழ்ந்து காறி;
அயலெலாம் சிறக்க நன்கு
அரும்பணி ஆற்றுமெங்கள்
உழைப்பவர் உலகமென்றும்
உயரவே வாழி! வாழி!

- பாரதிசீலன்

## பயணச்சீட்டுகள் பற்றாக்குறை வடபகுதி ரயில்கள் தாமதம்

வடபகுதி புகையிரத நிலையங்களில் பயணச்சீட்டுகள் பற்றாக்குறையினால் புகையிரதம் தாமதமாக வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அநேக புகையிரத நிலையங்களில் பயணச் சீட்டுகள் முடிவடைந்தும் அனுப்பிவைக்கப்படுவதில்லை இதனால் பதிவுப் புத்தகம் ஒன்றில் எழுதப்பட்டே பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் காரணத்தினாலேரயில் சேவை தாமதமாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (03)

## யாழ் மாவட்ட நிவாரணநிதி இனிமேல் விரைவில் வரும்

யாழ் மாவட்ட நிவாரணக் கொடுப்பனவுகளுக்கான நிதி இனி விரைவில் அனுப்பிவைப்பதாக புனர்வாழ்வு அமைச்சு உறுதியளித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதுவரைகாலமும்கட்டம்கட்டமாகவே இந்த நிவாரணநிதி வழங்கப்பட்டு வந்தது. இதன் காரணத்தினாலேயே யாழ் மாவட்ட நிவாரணக் கொடுப்பனவுகளில் தாமதமேற்பட்டது.

இந்தநிதி முழுமையாகவழங்கப்பட்டால்உடனடியாகநிவாரணக் கொடுப்பனவு வேலைகளை செய்யமுடியும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

## யாழ். செயலக இறைவரிக் கிளையில் வாகன அனுமதிப் பத்திரம் பெற இறுதித் திகதி நீடிக்கப்பட்டது

யாழ் செயலக இறைவரிக் கிளையில் வழங்கப்பட்டுவரும் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான இறுதித்திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் வாகன அனுமதிப் பத்திரம் பெறுவோர் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர்.இதன் பின்னர் இப்பத்திரங்களைப் பெறுவோருக்கு 10 சதவீதம் கூடுதலான பணம் அறவிடப்படும் (03)

### தமிழ மக்களின ..

மக்களுக்கான ஒட்டு மொத்த அரசியல் தீர்வுக்கான அரசமைப்பும் உருவாக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்துள்ள மேதின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வருடாவருடம் வரும் மே மாதம் முதல் நாளாகிய 'மேதினம்' பற்றி பரவலாக உலகம் பூராகவும் கொண்டாடப்பட்டோ அல்லது வீர நினைவு நாளாகவோ அன்றி எதிர்கால விடிவை நோக்கிய நாளாகவோ நினைவு கூரப்பட்டு வருகிறது. இந்நாள்

...7 ஆம் பக்கம் பார்க்க

## நேற்றைய தினம் ஐவர் விபத்தில் காயம்

நேற்றைய தினம் இடம்பெற்றவிபத்துகளில் ஐந்துபேர் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

பி.லாட்டு(68) பல்லவராயன்கட்டு,வீ. ராஜன்(2) நல்லூர்,ரீ.சிவபாலன்(23) சாவகச்சேரி, எஸ்.மஞ்சுளா (20) கோப்பாய், கஸ்தூரி (22) யாழ்ப்பாணம். (03)

### முரசொலி ..

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தச் சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றவிரும்புவர்கள்தமதுவிண்ணப்பங்களை 17ஆம் திகதிக்கு முன் கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும் என கேட்கப் பட்டுள்ளது. (விண்ணப்பம் மற்றும் விபரங்கள் 7ஆம் பக்கத்தில்)

### தேர்தலை...

தொழிலாளர்களை ஒரே அணியின் கீழ் அணி திரட்டி போராட்டத்தை முன்னெடுப்பதே எமது கட்சியின் நோக்கமாகும். எமது கட்சியானது தேர்தலை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மரபுவாத அரசியற் கட்சியல்ல. அதே வேளை எமது கட்சியின் கீழ் உருவாக்கப்படும் தொழிலாளர் பேரவையானது தொழிலாளர்களின் பூரண உரிமைக்காகப் போராடும்.

இதுவரை காலமும் தொழிலாளாகளை வழிநடத்திய சந்தர்ப்பவாதத் தலைமைகள் சலுகைகளுக்காகப் போராடினார்களே தவிர உரிமைகளுக்காகப் போடியது கிடையாது. சலுகைகளுக்கான போராட்டத்தில் கூட அவர்கள் வெற்றி பெற்றது கிடையாது.

இந்திய ஆக்கிரமிப்புப்படை எமது மண்ணில் வந்து எமது மக்கள் மீது போர் தொடுத்ததிலிருந்து எமது போராட்டத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய இனத்திற்கு துரோகமிழைத்த பல சந்தர்ப்பவாத தலைமைகளைக் கொண்டிருந்து செத்துப் போன அமைப்புக்கள் ''ஜனநாயக அரசியல்'' என்ற போர்வையில் தமிழீழம் எங்கும் தோன்றி தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து வருகின்றன.

இன்று ஏற்பட்டுள்ள புதிய திருப்பமானது செயலற்றுப் போன இவ் அமைப்புகளுக்கு புத்துயிர் அளிக்க ஏற்பட்ட ஒன்றல்ல.

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளாது அதற்காக எமது மக்கள் நடாத்திய போராட்டத்தில் இது வரை கலந்துகொள்ளாது செயலற்றிருந்த அமைப்புக்கள் எமது மக்களின், தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி இன்று பேச ஆரம்பித்திருக்கின்றன.

இவர்கள் சந்தர்ப்பவாதிகள் மட்டுமல்ல எமது மக்களின், தொழிலாளர்களின் போராட்டத்திற்கு எதிரிகளும் ஆவார்கள்.இவர்களை மக்கள் இனம்கண்டு கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றிலேயே இப்பொழுதுதான் முதன்முதலாக எமது மக்கள் சந்தர்ப்பவாத தலைமைகளை இனங்கண்டு கொண்டனர்.

துரோகத் தலைமைகளை தூக்கி எறிந்துள்ளார்கள்.

சிங்கள மேலாதிக்க வாதத் தலைமைகளைக் கொண்ட தொழிற்சங்கங்களிலிருந்து விடுபட முயல்கின்றனர்.

இந் நிலையில் தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தொடர்ந்தும் சரியான வழியில் வழிநடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியற் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் உருவாக்கப்படவிருக்கும் தொழிற்சங்கங்களில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் இணைவதன் மூலம் எமது மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொள்வதுடன் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொண்டு அதைப் பேணிப் பாதுகாக்கவும் முடியும்.

1987ஆம் ஆண்டு எமது இயக்கமானது முதன்முதலில் ஒரு மாபெரும் மேதின ஊர்வலத்தை நடாத்தியது.

சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிரான மக்களினதும் தொழிலாளர்களினதும் எழுச்சியாக நடந்த அப் பேரணியை ஒழுங்கமைப்பதில் தியாகிகள் திலிபன், பிரசாத் ,முரளி ஆகியோர் முன்னின்று உழைத்தனர்.

எமது கட்சியானது ஏகாதிபத்தியத்திற்கிம் நவகாலனித்துவத்திற்கும் எதிரான உலக தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு பூரண ஆதரவை வழங்கும்.

இன்றைய மே தினத்தில் அனைத்து தமிழ் பேசும் தொழிலாளர்களும், விடுதலைப் புலிகள் தொழிலாளர் பேரவையின் கீழ் அணிதிரண்டு தமது உரிமைகளுக்காகவும், எமது மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகவும் போராட வருமாறு அழைக்கின்றேன்.

## யாழ். இரவு மெயில் ரயிலில் சூட்டுக்காயத்துடன் சடலம்

நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட தபால் ரயிலில் இனந்தெரியாத ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ரயிற் கன்ரினில் இவரது சடலம் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் கிடந்தது இதனால் ரயில் கொடிகாமத்தில் சிலமணி நேரம் தாமதித்து பின்னர் தனது பயணத்தை தொடர்ந்தது.

## யாழ்-வெற்றிலைக்கேணி பஸ் சேவை நேற்று ஆரமபம்

யாழ்ப்பாணம்– வெற்றிலைக்கேணி புதிய பஸ் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நேற்று மாலை 3 மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் மாலை 6.00 மணிக்கு வெற்றிலைக்கேணியைச் சென்றடைகிறது.

இன்று காலை 6.00 மணிக்கு வெற்றிலைக்கேணியில் இருந்து இந்த பஸ் புறப்பட இருக்கிறது.

வடமராட்சி கிழக்கின் அநேக பொது ஸ்தாபனங்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆளியவளைக்கடற்கரை வீதிக்கூடாகவே இந்த பஸ் வெற்றிலைக் கேணியைச் சென்றடைகின்றது. (43)

## மட்டக்களப்பு மே தின ஊர்வலம்

மட்டக்களப்பு விடுதலைப் புலிகள்மக்கள்முன்னணி மேதினத்தைபெரியஅளவில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. (ஊர்வலம், கூட்டம் பற்றிய விபரங்கள் உள்ளே)

## மேன்முறையீடு மாகாணசபையில்

தொழில் பிணக்குகள் தொடர்பாக மேன்முறையீடுகள் இனி மாகாணசபைகளிலும்செய்யமுடியும்.இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

## மறுமலர்ச்சிக கழகப் பொதுக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் ஒழுங்குசெய்துள்ள பொதுக்கூட்டம் ஒன்று 4ம் திகதி வெள்ளிக்கிழமை பி,ப,3.00மணியளவில்கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும்மாணவர்களும், தற்போது ஆங்கிலப் பயிற்சி வகுப்பைத் தொடரும் புதிய மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் திரு.வே.அருனோதயம்தெரிவித்துள்ளார்.

### 150 இல. தமிழர்...

கைப்பற்றியுள்ளனர்இங்கு கட்சியின் தலைவர் உட்பட அறுபது பேர் கைதானார்கள்.

இதே சமயம் ஈ. பி. ஆர் எல்' எப் அலுவலகம் ஒன்றை.யும்தமிழகப் பொலிஸார் முற்கையிட்டு ஒரிஸாவில் இருந்து தப்பிவந்த 90 பேரைக் கைது செய்துள்ளனர்.

### கலலுடைசகும...

கல்லுடைககும் இயந்திர உரிமையாளர்களின் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் சகல உரிமையாளர்களும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் முன்னணி கேட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஃ ஐ இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 01-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது